திருப்பங்கள் வேண்டி திருப்பாம்புரம் வாரீர் !



அருள்மிகு வண்டுசேர்குழலி



அருள்மிகு சேஷபுரீஸ்வரர்



அருள்மிகு இராகு – கேது

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





## தமிழ்நாடு அரசு
## இந்துசமய அறநிலையத் துறை

# அருள்மிகு பிரமராம்பிகா சமேத
# அருள்மிகு சேஷபுரீஸ்வரர் திருக்கோயில்

**(இராகு – கேது ஸ்தலம்)**

**திருப்பாம்புரம்,** குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம்.

tnhrce.org

போன் :
0435 - 2469555

# ரஜதபந்தன
# மஹா கும்பாபிஷேக பத்திரிக்கை

**விநாயகர் துதி**

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

திருமூலர்.

**நாள் :**
**10-04-2017**
**திங்கள்கிழமை**
காலை மணி
**9-00 to 10-30**

**தேவாரம்**

நதியதனயலே நகுதலை மாலை நாண் மதி சடை மிசையணிந்து
கதியதுவாகக் காளிமுன் காணக் கானிடை நடஞ்செய்த கருத்தர்
விதியது வழுவா வேதியர் வேள்வி செய்த தவரோத்தோலி யோவா
பதியதுவாகப் பாவையுந்தாமும் பாம்புர நன்னகராரே.

திருஞானசம்பந்தர்.

பூவிழி பொழில் சூல் காவிரி பாய்தலால் வளம் மலிந்த சோழ நாட்டிலே என்றும் குன்றாத வீரக்குடி மக்கள் விளக்கமுற்று ஞானசெல்வர்களாய் வாழும் தொன்மையான நன்னகரம் - **திருப்பாம்புரம்.**

காவிரித் தென்கரையில் 59 வது பாடல் பெற்ற திருத்தலமாகத்திகழ்வது மூர்த்தி, தலம், தீர்த்தம், என மூன்றாலும் சிறப்புடையது.

திருக்கயிலாயத்தில் விநாயகர் சிவபெருமானை வழிபட்ட போது சிவன் கழுத்தில் இருந்த பாம்பு விநாயகர் தன்னையும் வணங்குவதாக எண்ணி கர்வம் அடைந்தது. அதனை அறிந்து சினமுற்ற இறைவன் நாக இனம் முழுவதும் தம் சக்தி அனைத்தும் இழக்கும் படி சாபம் இட்டார். சாபக் கழுவாய் வேண்டி நாகங்கள் எல்லம் பல காலம், பல தலங்களில் வழிபட்டும் பலன் இன்றி ஆதிசேஷன் தலைமையில் அஷ்டமாக நாகங்களாகிய அனந்தன், வாசுகி, தட்சகன், கார்க்கோடகன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகா பத்மன் எனும் பெயருடைய நாகங்கள் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

ஆதிசேஷன் உலகைத் தாங்கும் சுமையால் நலிவுற்ற ஈசனை தொழுது வேண்ட மாக சிவராத்திரி அன்று இரவு திருக்குடந்தை நாகேஸ்வர், திருநாகேஸ்வரம் நாகநாதர், திருப்பாம்புரம் சேஷபுரீஸ்வரர், திருநாகூர் நாகநாதர் ஆகிய பெருமான்களை வழிபட்டு புத்துணர்ச்சி பெற்ற ஆதிசேஷன் சிவராத்திரி மூன்றாம் யாமத்தில் திருப்பாம்புரம் வந்து ஆதிசேஷ தீர்த்தம் உண்டாக்கி நீராடி, அகத்தி மலரை ஆலம் விழுதால் தொடுத்து சேஷபுரீஸ்வரரை வணங்கி நலம் பெறறார். மேலும் பிரம்மன், இந்திரன், பார்வதி, அக்னி, சூரியன், சந்திரன், கங்கை, அகத்தியர், சுனிதன், தக்கன், கோட்செங்கசோழன் ஆகியோரும் இத்தலத்து ஈசனை வழிபட்டு நலம் பெற்றனர்.

இத்தலத்தில் நாகங்கள் மூலஸ்தானத்திலும் பிற இடங்களிலும் எளிதிலும், இயல்பாகவும் நிறையக்காணப்பட்டாலும் அவை அடியார்களானமையால் யாரையும் தீண்டியதில்லை. இத்தலத்தை எண்ணற்றோர் வழிபட்டு பாம்பு பாம்பு போல் சுற்றும் தீவினைகள் எல்லாம் தீரப்பெற்றுச் சிவானந்தம் பெருவாழ்வில் திளைத்து இன்புறுகின்றனர். ராகுவும், கேதுவும் ஏகசரீரமாகி இறைவனை பூஜித்த தலமாதலின் இத்தலம் வரும் பக்தர்கள் சகல தோஷங்களும் நீங்கப்பெற்று ஈசனருள் பெறுகின்றனர்.

நான் மறை ஞானசம்மந்த பெருமானால் திருப்பதிகம் பெற்றதும், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரால் பாடல் பெற்றதும் இராஜராஜன், இராஜேந்திரன், சுந்தரபாண்டியன், சரோபோஜி மன்னன், சுபேதார் ரகுநாத பண்டித ராஜன் ஆகியோரால் திருப்பணிகள் செய்விக்க பெற்றதுமான

இத்திருக்கோயிலின் **மஹா கும்பாபிஷேக பெருவிழா**
நிகழும் மங்களரமான துர்முகி வருடம் பங்குனி மாதம் 28 ஆம் நாள்
**(10-04-2017) திங்கள்கிழமை காலை 9-00 மணிக்கு மேல் 10-30 மணிக்குள்**

**ரஜதபந்தன மஹா கும்பாபிஷேகம்**

tnhrce.org

தருமை ஆதீனம் 26 –வது குருமகா சன்னிதானம்
சீர்வளர் சீர் ஸ்ரீலஸ்ரீ **சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.**

திருவாவடுதுறை ஆதீனம் 24 –வது குருமகா சன்னிதானம்
சீர்வளர் சீர் ஸ்ரீலஸ்ரீ **அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.**

திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் கயிலை மாமுனிவர்
சீர்வளர் சீர் ஸ்ரீலஸ்ரீ **காசிவாசி முத்துக்குமரசாமி தம்பிரான் சுவாமிகள்.**

வேளாக்குறிச்சி ஆதினகர்த்தர்
சீர்வளர் சீர் ஸ்ரீலஸ்ரீ **சத்தியஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.**

இவர்கள் கலந்துகொண்டு
ஆறு கால யாகசாலை பூஜை வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

சர்வசாதகம் : சிவாகம, கலாநிதி சைவ சித்தாந்த சரபம்
**A.V.சுவாமிநாத சிவாச்சாரியர்** அவர்கள்.
முதல்வர் சிவபுரம தேவ பாடசாலை – மயிலாடுதுறை.

ஆலய அர்ச்சகர்கள் :
**G.பிரேம்குமார் குருக்கள்** உபசர்வசாதகம்
**V.கௌரிசங்கர் குருக்கள், G.சுரேஷ் குருக்கள்**



## நிகழ்ச்சி நிரல் :-

| தமிழ் தேதி | | ஆங்கில தேதி | கிழமை | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|---|---|
| மங்களகரமான ஸ்ரீ துர்முகி வருடம் பங்குனி மாதம் | 23 | 05-04-2017 | புதன் | இரவு 8.45 | அனுக்ஞை, தனபூஜை ,மஹா சங்கல்பம், ஆச்சார்யவர்ணம். |
| | 24 | 06-04-2017 | வியாழன் | காலை 9.00 | கணபதி ஹோமம், நவகிரஹ ஹோமம், ஸ்ரீ லக்ஷ்மி ஹோமம். |
| | | | | மாலை 5.00 | வாஸ்து சாந்தி, ப்ரவேசபலி, ரக்ஷோக்னஹோமம், மிருத்சங்கிரஹணம், அங்குரார்பணம், ப்ரதான ஆச்சாரிய ரக்ஷாபந்தனம். |
| | 25 | 07-04-2017 | வெள்ளி | காலை 9.00 | சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், திசா ஹோமம், ப்ரசன்னாபிஷேகம், பரிவார கலாகர்ஷனம். |
| | | | | மாலை 5.00 | ரித்விஜர்கள் ரக்ஷாபந்தனம், கும்பாலங்காரம், கலாகர்ஷனம், **முதல் கால பூஜை ஜபம் ஹோமம்.** |
| | | | | இரவு 8.30 | பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | 26 | 08-04-2017 | சனி | காலை 8.30 | **இரண்டாம் கால பூஜை ஜபம் ஹோமம்.** |
| | | | | காலை 11.30 | பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | | | | மாலை 6.00 | **மூன்றாம் கால பூஜை ஜபம் ஹோமம்.** |
| | | | | இரவு 8.30 | பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | 27 | 09-04-2017 | ஞாயிறு | காலை 8.30 | **நான்காம் கால பூஜை ஜபம் ஹோமம்.** |
| | | | | காலை 11.30 | பூர்ணாஹுதி, தீபாராதனை, விமான கலசஸ்தாபனம். |
| | | | | மாலை 6.00 | **ஐந்தாம் கால பூஜை ஜபம் ஹோமம்.** லக்ஷ்மி பூஜை, சுவாசினி பூஜை, கன்னிகா பூஜை, கோ பூஜை, கஜ பூஜை, ஸர்ப பூஜை. |
| | | | | இரவு 8.30 | பூர்ணாஹுதி, தீபாராதனை. பிரதான மூல மூர்த்திகள் ரஜதபந்தன, அஷ்டபந் மருந்துசாத்துதல். |
| | 28 | 10-04-2017 | திங்கள் | காலை 6.00 | **ஆறாம் கால பூஜை ஜபம் ஹோமம்.** தத்துவார்ச்சனை, ஸ்பருசாஹுதி |
| | | | | காலை 7.00 | ஸ்ரீ சிற்றம்பல விநாயகர் மஹா கும்பாபிஷேகம் தொடர்ந்து யாகசாலையில் |
| | | | | காலை 9.00 | மஹா பூர்ணாஹுதி, யாத்ராதானம், கடங்கள் புறப்பாடு. |
| | | | | காலை 10.00 | **விமான கோபுரம், ராஜ கோபுரம் கும்பாபிஷேகம்.** |
| | | | | காலை 10.30 -க்குள் | **மூல மூர்த்திகள் மஹா கும்பாபிஷேகம், பிரசாதம் வழங்குதல்.** |
| | | | | மாலை 6.00 | **மஹாபிஷேகம்.** |
| | | | | இரவு 8.00 | **பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா காட்சி.** |

tnhrce.org

குறிப்பு : யாக சாலையில் தினமும் காலை, மாலை சிறப்பு நாதஸ்வர மேளமும், சதுர்வேத பாராயணமும், திருமுறைப் பாராயணமும் நடைபெறும்.

**பங்குனி மாதம் 28 ந்தேதி (10-04-2017) திங்கட்கிழமை மகாபிஷேகம் முதல் தினசரி 48 நாட்கள் மண்டலாபிஷேக சிறப்பு வழிபாடு நடைபெறும்.**

மேனாள் தமிழ்நாடு முதலமைச்சர்

**புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீர்மிகு திட்டத்தின்படி நடைபெறும்**

திருக்குடமுழக்கு பெருவிழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், மற்றும் சமய சான்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். அதுசமயம் பக்த பெருமக்கள் அனைவரும் திருக்குடமுழக்கு பெருவிழாவில் கலந்து கொண்டு **திருப்பாம்புரம்** அருள் தரும் வண்டுசேர்குழலி உடனமர் **அருள்மிகு பாம்புரநாதர் (சேஷபுரீஸ்வரர்)** திருவருளை பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

திருப்பணி மற்றும் மஹா கும்பாபிஷேகத்திற்கு நன்கொடை அளிக்க விரும்புவோர் கீழ்காணும் முகவரிக்கு நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ காசோலை (Cheque), வரைவோலை (DD) மூலமாகவும் நன்கொடை செலுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது. **செயல் அலுவலர்,**
**அருள்மிகு சேஷபுரீஸ்வரர் திருக்கோயில் திருப்பாம்புரம்,** சுரைக்காயூர் அஞ்சல்,
குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம், Pin : 612 203. Ph : 0435 - 2469555, 99438 48107

tnhrce.org

**அன்னதானத்திட்டம்**

" உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே !! "

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அன்னதானத்திட்டம் 11-09-2011 முதல் நடைபெற்று வருகிறது. மேற்படி திட்டத்திற்கு நாளொன்றுக்கு ரூ. 2000/-ம், நிரந்தர டெபாசிட் திட்டத்திற்கு ரூ. 25,000/- ம் செலுத்தி பயன் பெற்றுக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நிர்வாகி / அன்னதானத்திட்டம், அருள்மிகு சேஷபுரீஸ்வரர் திருக்கோயில் திருப்பாம்புரம்,
சுரைக்காயூர் அஞ்சல், குடவாசல் வட்டம், திருவாரூர் மாவட்டம், Pin : 612 203.
Ph : 0435 - 2469555, 99438 48107

இங்ஙனம்,

**பா.இராணி** B.A., B.L.,
தக்கார் / செயல் அலுவலர்.

**திருக்கோயில் பணியாளர்கள்,**
மற்றும் **கிராமவாசிகள்**
திருப்பாம்புரம்.

**கி.பாரதிராஜா** B.A., B.L.,
செயல் அலுவலர்.
செல் : 99 43 84 8107